# 3

# நபிமார்களும் ரஸூல்மார்களும்



நபிமார்கள் எனப்படுவோர் அல்லாஹ்விடமிருந்து வஹியைப் பெற்று அதனை மக்களுக்குப் போதித்தோர் ஆவர். நபிமார்களுள் சிறப்புக்குரியவர்களாக ரஸூல்மார்கள் கருதப்படுகின்றனர். இவர்கள் அல்லாஹ்விடமிருந்து வேதத்தைப் பெற்றவர்கள் ஆவர். அல்லாஹ் அண்ணளவாக ஒரு இலட்சத்து இருபத்து நாலாயிரம் நபிமார்களை உலகிற்கு அனுப்பியுள்ளான். அவர்களுள் முன்னூற்றுப் பதின்மூன்று பேர் ரஸூல்மார்களாவர்.




அல் குர்ஆனில் இருபத்தைந்து நபிமார்களின் பெயர்களே குறிப்பிடப்படுகின்றன. அவர்கள் அனைவரும் ரஸூல்மார்களுமாவர். ரஸூல் மார்களுள் நூஹ் அலைஹிஸ்ஸலாம், இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம், மூஸா அலைஹிஸ் ஸலாம், ஈஸா அலைஹிஸ் ஸலாம், முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஆகியோர் **உலுல் அஸ்ம்** (திட உறுதி பூண்டவர்கள்) என அழைக்கப்படுகின்றனர்.

அல்லாஹ்வின் வழிகாட்டல்களை ரஸூல் மார்களுள் சிலர் ஸுஹுபு களாகவும் இன்னும் சிலர் வேதங்களாகவும் பெற்றனர். மூஸா அலை ஹிஸ்ஸலாம் அவர்கள் வேதங்கள், ஸுஹுபுகள் ஆகிய இரண்டையும் பெற்ற ரஸூல் ஆவார். வேதம் வழங்கப்பட்ட ரஸூல்மார்களில் நால்வரின் பெயரையே அல் குர்ஆன் குறிப்பிட்டுக் கூறுகின்றது.

| வேதம் வழங்கப்பட்டவர் | வழங்கப்பட்ட வேதம் | மொழி |
|---|---|---|
| மூஸா அலைஹிஸ்ஸலாம் | தௌராத் | அபரானி (ஹீப்ரு) |
| தாவூத் அலைஹிஸ்ஸலாம் | ஸபூர் | யூனானி / கிரேக்கம் |
| ஈஸா அலைஹிஸ்ஸலாம் | இன்ஜீல் | ஸுர்யானி / ஸிரிய |
| முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் | புர்கான் | அரபு |

நபிமார்கள் அனைவரும் மனிதர்களாவர். அவர்களிடம் அன்பு, வாய்மை, நீதி, நேர்மை, தியாகம், தூய்மை, பிறர் நலன்பேணல், அமானிதம் பேணல், நுண்ணறிவு, ஈகை போன்ற உயர்ந்த பண்புகள் பூரணமாகக் காணப்பட்டன. மேலும் மக்கள் அவர்களை நபியென்று இனங்காண்பதற்காக அல்லாஹ் அவர்களுக்கு முஃஜிஸாத்களை (அற்புதங்களை) வழங்கியிருந்தான். அவர்கள் அவற்றைக் கொண்டு தாம் நபியென்பதை நிரூபித்துக் காட்டி அல்லாஹ்வின் மார்க்கத்தின் பால் மக்களை அழைத்தார்கள்.

### சில ரஸூல்மார்களும் அவர்களுக்கு வழங்கப்பட்ட முஃஜிஸாத்களும்

1. மூஸா அலைஹிஸ்ஸலாம் - கைத்தடி பாம்பாகுதல், கை பிரகாசமாதல்.
2. தாவூத் அலைஹிஸ்ஸலாம் - இரும்பு மிருதுவாக்கப்படல்.
3. ஸுலைமான் அலைஹிஸ்ஸலாம் - ஜின்கள், காற்று போன்றன வசப்படுத்தப்படல், ஏனைய உயிரினங்களின் மொழியை விளங்குதல்.
4. ஈஸா அலைஹிஸ்ஸலாம் - மரணித்தவர்களை உயிர்ப்பித்தல், பிறவிக் குருடன், குஷ்டரோகி போன்றவர்களை சுகப்படுத்தல், வீடுகளில் மறைந்துள்ள பொருட்களைக் கூறுதல்.
5. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் - அல் குர்ஆன்

அல்லாஹ் உலகில் தோன்றிய எல்லா சமூகங்களுக்கும் அவர்களை நேர்வழிப்படுத்துவதற்காக நபிமார்களை அனுப்பியுள்ளான். மறுமையில் மனிதர்கள் விசாரிக்கப்படுகின்றபோது ஒவ்வொரு சமூகத்தாரும் தமக்கு அனுப்பப்பட்ட நபியுடனேயே அல்லாஹ்வின் முன்னிலையில் தோன்றுவர். ஒவ்வொரு நபியும் தம் உம்மத்தினர் குறித்து அல்லாஹ்விடம் சாட்சி கூறுபவராக இருப்பார்.

நபிமார்கள் அல்லாஹ்வின் மார்க்கத்தை அழகிய முறையில் தாம் அனுப்பப்பட்ட சமூகத்தவர்களுக்கு எத்திவைக்கும்போது கடுமையாக சோதிக்கப்பட்டார்கள்.

சிலர் அவர்களின் போதனைகளை ஏற்றுக் கொண்டனர். வேறு சிலர் எதிர்த்தனர்.

அவர்களை ஊரைவிட்டு விரட்டினர். கொலை செய்ய முயற்சித்தனர். ஸகரிய்யா அலைஹிஸ்ஸலாம், யஹ்யா அலைஹிஸ்ஸலாம் ஆகிய நபிமார்களை கொலை செய்தனர். நபிமார்கள் தமக்கெதிராக வந்த எல்லா சவால்களையும் பொறுமையுடனும் மன உறுதியுடனும் எதிர் கொண்டார்கள்.

நபிமார்களைப் புறக்கணித்து தம் மனோ இச்சைப்படி வாழ்ந்த பல சமூகங்கள் பல்வேறு விதமான முறையில் அழிக்கப்பட்டுள்ளன. நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களது சமூகம் வெள்ளத்தைக் கொண்டும், ஹூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களது ஆத் சமூகம் காற்றைக் கொண்டும், ஸாலிஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களது ஸமூத் சமூகம் பேரிடியைக் கொண்டும், லூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களது சமூகம் கல்மாரி பொழிதலைக் கொண்டும் அழிக்கப்பட்டதாக அல் குர்ஆன் குறிப்பிடுகிறது.

உலகிற்கு அனுப்பப்பட்ட எல்லா நபிமார்களும் இஸ்லாம் என்ற அல்லாஹ்வின் மார்க்கத்தைக் கட்டியெழுப்பும் பணியிலேயே ஈடுபட்டார்கள். அதனை ஆரம்பித்து வைத்தவர் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களாவார். முடித்து வைத்தவர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களாவார். ஆகவேதான் அல்லாஹ் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை **'காத்தமுன் நபிய்யீன்'** நபிமார்களில் இறுதியானவர் என்றும் **'ரஹ்மதுன் லில் ஆலமீன்'** அகிலத்தாருக்கு அருட்கொடை என்றும் குறிப்பிடுகின்றான்.

உலகிற்கு அனுப்பப்பட்ட எல்லா நபிமார்களும் மரணமாயினர். விதிவிலக்காக ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மாத்திரம் விண்ணுலகிற்கு உயர்த்தப்பட்டார். ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மீண்டும் உலகிற்கு வந்து முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முழுமைப்படுத்திய தீனை முழு உலகிலும் அமுல்படுத்தி செல்வமும் அமைதியும் நிலவும் ஒரு தேசத்தை உருவாக்குவார்கள் என்பது மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாகும்.

## சில நபிமார்களும் அவர்களது சிறப்புப் பெயர்களும்

| நபியின் பெயர் | சிறப்புப் பெயர் | பொருள் |
|---|---|---|
| ஆதம் அலைஹிஸ்ஸலாம் | அபுல் பஷர் | மனிதர்களின் தந்தை |
| இப்ராஹிம் அலைஹிஸ்ஸலாம் | கலீலுல்லாஹ் | அல்லாஹ்வின் நண்பன் |
| மூஸா அலைஹிஸ்ஸலாம் | கலீமுல்லாஹ் | அல்லாஹ்வுடன் பேசியவர் |
| ஈஸா அலைஹிஸ்ஸலாம் | ரூஹுல்லாஹ் | அல்லாஹ்வின் ரூஹ் |

அனைத்து நபிமார்களையும் ஏற்றத்தாழ்வின்றி விசுவாசிப்பதும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை முழுமையாகப் பின்பற்றுவதும் எமது கடமையாகும்.

**பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்**

أُولُو الْعَزْمِ　أَبُو الْبَشَرِ　كَلِيْمُ اللهِ　رُوْحُ اللهِ　خَاتَمُ النَّبِيِّيْن　الْمُعْجِزَاتُ　الصُحْفُ

وَحْيٌ　الرَسُوْلُ　النَبِيُّ　خَلِيْلُ اللهِ　رَحْمَةٌ لِلْعَالَمِيْن

### பயிற்சி

**அ. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக :**

1. உலுல் அஸ்ம் எனப்படும் நபிமார்கள் யாவர்?
2. நபிமார்களிடம் காணப்படும் உயர்ந்த குணப் பண்புகள் எவை?
3. விண்ணுலகிற்கு உயர்த்தப்பட்ட நபி யார் ?
4. கொலை செய்யப்பட்ட இரு நபிமார்களினதும் பெயர்களைத் தருக.

**ஆ. ஆசிரியரின் உதவியுடன் பொருத்தமான முறையில் இணைக்குக.**

| | |
|---|---|
| நூஹ் அலைஹிஸ்ஸலாம் | ஸுர்யானி மொழி |
| மூஸா அலைஹிஸ்ஸலாம் | அல் குர்ஆன் |
| முஃஜிஸா | கப்பல் |
| ஸுலைமான் அலைஹிஸ்ஸலாம் | பனூ இஸ்ரவேலர் |
| ஈஸா அலைஹிஸ்ஸலாம் | ஜின்கள் |